முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம், விழுப்புரம்

S.C.No.106/2015

(LW-11) PW -11

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணி | மதம் | |
| த/பெ | | தொழில் | |
| கிராமம் | | வயது | |
| தாலுக்கா | | தேதி | 23.04.2024 |

(23/04/2024) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்பட்டது. ( 1, 2 எதிரிகள் ஆஜர்)

(கு.வி.மு.ச.311 மனு செய்து, மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி))

குறுக்கு விசாரணை

இந்த வழக்கின் எதிரி ஜெயபிரகாஷ் நாராயணன் என்பவர் 24.11.2008ந் தேதி உதவி ஆய்வாளர் திரு.குமார் மற்றும் தலைமை காவலர் ராமலிங்கம் மற்றும் காவலர்கள் மீது ஒரு புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த புகார் காவல் நிலையத்திற்கு தபாலில் 25.11.2008 அன்று வந்தது. அந்த புகார் அடிப்படையில் உதவி ஆய்வாளர் குமார் மற்றும் தலைமை காவலர் ராமலிங்கம் ஆகியோருக்கு எதிராக காவல் நிலையத்தில் மனு ரசீது எண்.222/2008 வழங்கப்பட்டது. பின்பு புகாரை பரிசீலித்து 13.02.2009ந் தேதி குற்ற எண்.70/2009 இதச பிரிவுகள் 147, 325, 323, 294பி மற்றும் எஸ்.சி.எஸ்.டி..சட்டம் 3 (1) (x) ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். எதிரி ஜெயபிரகாஷ் நாராயணன் என்பவருக்கு புகாரின் படி காயம் ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கின் இறுதி அறிக்கையில் எதிரிக்கு ஏற்பட்ட காயம் குறித்து குறிப்பிட்டுள்ளேன். புகார்தாரரை 1ம் எதிரி தாக்கியதாகவும், அப்போது அவருக்கு சுண்டுவிரலில் காயம் ஏற்பட்டதாகவும் சொல்லி உள்ளேன் என்றும், காவலர்கள் தாக்கியதில் 1ம் எதிரிக்கு ஏற்பட்ட காயம் குறித்து குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நானும், உதவி ஆய்வாளர் குமார், தலைமை காவலர் ராமலிங்கம் மற்றும் காவலர்கள் சேர்ந்து 1ம் எதிரியை தாக்கியதில் அவருக்கு காயங்கள் ஏற்பட்டது என்றும், அவர் நல்ல நிலையில் நடக்கக்கூடிய

அளவு இல்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிரி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்ட போது மருத்துவ நமுனா பெற்றேன். எதிரிக்கு மருத்துவ நமுனா கொடுத்த மருத்துவரை நான் விசாரித்தேன். அவ்வாறு விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. சாட்சி பட்டியலில் மருத்துவர் ராதாகிருஷ்ணன் என்பவர் பெயர் இல்லை. சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்ட போது தன்னை காவலர்கள் தாக்கியதாக சொல்லி நீதித்துறை நடுவர் அவர்கள் முன்பு எடுத்துரைத்து அதை நடுவரும் தனது உத்தரவில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் குற்ற எண்.70/2009 என்ற வழக்கில் சான்று அளிக்கப்பட்ட முதல் தகவல் அறிக்கை சரிதான். அந்த முதல் தகவல் அறிக்கை எ.த.சா.ஆ.2. பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடத்தில் பாண்டியன் மெஸ் என்ற இடம் குறிப்பிடவில்லை. சாட்சிகள் விநாயகம் மற்றும் சுந்தரமூர்த்தி ஆகியோரை எந்த தேதியில் விசாரித்தேன் என்று என்னுடைய கையொப்பம் செய்து அதன் கீழ் தேதி குறிப்பிட்டுள்ளேன். சாட்சிகளின் வாக்குமூலம் நான் சொல்ல தலைமை காவலர் எழுதினார். அவரை சாட்சியாக சேர்க்கவில்லை. 1ம் எதிரியை கைது செய்தது குறித்து அவரது உறவினர் நாகமுத்து என்பவருக்கு தெரியப்படுத்தியதாக கைது நமுனாவில் சொல்லியுள்ளேன். அந்த நமுனா நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்னது போல் 1ம் எதிரியின் உறவினருக்கு முறையாக தகவல் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 23.11.2008 ந் தேதி இரவே 1ம் எதிரியை சட்டவிரோதமாக காவல் நிலையம் அழைத்து சென்று அவரை தாக்கி காயம் ஏற்படுத்தினோம் என்று சொன்னால் சரியல்ல. எதிரி மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அ.சா.2 சக்திவேல் என்பவரை மருத்துவமனையில் வைத்து 24.11.2008 அதிகாலை 01.00 மணிக்கு விசாரித்தேன். அ.சா.2 ராமலிங்கம் புறநோயாளியாக தான் சிகிச்சை பெற்றார் என்று அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் தனது சாட்சியத்தில் சொல்லியுள்ளார் என்று சொன்னால் அவ்வாறு என்னிடம் வாக்குமூலத்தில் சொல்லவில்லை. ஒரு நபரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தும் போது அவர் உடலில் காயங்கள் இருந்தால் அதற்கான காரணத்தை குறிப்பிட வேண்டும்

என்றால் சரிதான். எதிரிக்கு காவல் நிலையத்தில் தாக்கியதில் ஏற்பட்ட காயங்களுக்கு அவருக்கு சிறையில் வைத்து சிகிச்சை அளிக்கப்பட்டது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆனால் காவல் நிலையத்தில் வைத்து நாங்கள் தாக்கவில்லை. 25.11.2008ந் தேதி 1ம் எதிரி அனுப்பிய புகாரை பெற்று மூன்று மாதங்கள் கழித்து வழக்கு பதிவு செய்ததற்கு காரணம் என்னவென்றால் அவர் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டு சிறையில் இருந்ததால் அவர் வரவில்லை. ஆகையால் உடனடியாக வழக்கு பதிவு செய்யவில்லை. 1ம் எதிரி கொடுத்த புகாரின் அடிப்படையில் முறையாக வழக்கு பதிவு செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிரி கொடுத்த புகார் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டு மேல் விசாரணைக்காக காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களிடம் வழக்கு கோப்பு ஒப்படைக்கப்பட்டது, அவர் விசாரணை முடித்து சங்கதி பிழை என்று முடிவு செய்து மேல் நடவடிக்கை கைவிடப்பட்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அது குறித்த விவரம் எந்த தேதியில் எனக்கு தெரிய வந்தது என்று நினைவில்லை. 1ம் எதிரி என் மீதும், மற்றும் இரண்டு காவல் துறை நபர்கள் மீதும் மாநில மனித உரிமை ஆணையத்தில் புகார் கொடுத்து அதில் நான் விசாரணைக்கு ஆஜர் ஆனேன் என்றால் சரிதான். அதில் நான் பதிலுரை தாக்கல் செய்தேன். அந்த பதிலுரையில் தான் 1ம் எதிரி கொடுத்த புகார் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு சங்கதி பிழை என்று முதன்முதலாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல, அதற்கு முன்பே எனக்கு தெரியும். அந்த பதிலுரை 21.01.2015ந் தேதி தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் 27.07.2009ந் தேதி இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அது நீதிமன்றத்தில் 2009ம் வருடத்தில் செப்டம்பர் மாதம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இறுதி அறிக்கை திருப்பப்பட்டு 2015ம் வருடத்தில் தான் கோப்பிற்கு எடுக்கப்பட்டது என்றால் அதுப்பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. மாநில மனித உரிமை ஆணையத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதை வைத்து அவசரமாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மாநில மனித உரிமை ஆணையத்தில் 16.09.2019 அன்று இறுதி உத்தரவு வழங்கப்பட்டது என்றும், அதன் படி 1ம் எதிரிக்கு ரூ.5,00,000/- இழப்பீடாக மாநில அரசு வழங்க வேண்டும் என்றும், அந்த

தொகையில் ரூ.2,00,000/- நான் மாநில அரசுக்கு செலுத்த வேண்டும் என்றும் உத்தரவானது என்றால் சரிதான். அந்த உத்தரவின் படி துறை ரீதியான நடவடிக்கை மற்றும் குற்றவியல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டது என்றால் சரிதான். மாநில மனித உரிமை ஆணையத்தில் உத்தரவை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டு அது தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மாநில மனித உரிமை ஆணையத்தின் பரிந்துரையின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசாணை எண்.289/2023, நாள்.13.03.2023 வழங்கப்பட்டது என்றால் சரிதான். என்னுடன் பணிபுரியும் காவலர்களுக்கு ஆதரவாக இந்த வழக்கை முறையாக விசாரணை செய்யாமல் நான் மேல் விசாரணைக்கு வழக்கு கோப்பை வைத்தேன் என்று சொன்னால் சரியல்ல.

(Sd/-N.S.Jayaprakash)
Principal Assistant Sessions Judge,
Villupuram